தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveerarnaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

**17 வயதுப்பிரிவு**
(01.01.2003 – 31.12.2004 வரையில் பிறந்தோர்)

## இளைய தலைமுறை எழுச்சி கொள்ளட்டும்!

“இளமையில் இருந்துதான் முழுமையை வளர்க்க முடியும்” என்பது தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் கூற்று. இளைஞர்களைப் பார்த்து, “உங்கள் மனதை உயர்ந்த இலட்சியங்களாலும் எண்ணங்களாலும் நிரப்புங்கள்” என்றார் துறவி விவேகானந்தர். எம் தமிழின இளையோர்கள் இவற்றை மனதிற் கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

மனிதனாகப் பிறந்தவர்களுக்கு இளமை என்பது பெருவரம். இளையோர்கள் புதிய விளைநிலத்தைப் போல் பெருவிளைச்சலுக்காய் காத்திருப்பவர்கள். இளையோர்கள் தம்மைப் பண்படுத்தி, தகவமைத்து உன்னதமானவர்கள் ஆக்கவேண்டிய பொறுப்புக்கு உரியவர்கள். இளமை என்னும் அருமையான வாய்ப்பை எம்தமிழ் இளையோர்கள், எம்மினத்தின் உயர்வுக்காய் பயன்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும். தன்னுடைய இளமைப்பருவத்தில் தாய்நாட்டிற்காகவும் இனத்துக்காகவும் போராடத் துணிந்த தலைவனைப் பெற்றவர்கள் நாங்கள். வீரத்தோடும், மானத்தோடும், மற்றைய இனங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் வாழ்ந்தது எம் தமிழினம்.

தமிழினம் சுதந்திரமாக வாழத் தம்மையே ஒப்புக்கொடுத்த பல்லாயிரம் ஆண், பெண் மாவீரர்களைப் பெற்றவர்கள் நாங்கள். இவர்களெல்லாம் இளமையிலேயே தம்வாழ்வை இனத்தின் மீட்சிக்காக ஒப்புவித்த பெருமைக்குரியவர்கள். இவர்கள் எமது வாழ்விற்கு என்றும் வழிகாட்டிகளாக நம்முன்னே நிற்பவர்கள். ஆட்சியிழந்து, அவலம் சுமந்து, அடிமைகளாக அழுதுநின்ற எம்மினத்தை நிமிரச்செய்த பெருவலிமை கொண்டவர்கள் இவர்கள். தங்களுடைய வாழ்வை ஒப்புவிப்பதன் ஊடாக, இளையோருக்கு விடுதலை மிக்க வாழ்வை பெற்றுத்தர நினைத்தவர்கள் இவர்கள். இவர்களின் எண்ணங்களைச் சிதைவுறாமலும் அழிவுறாமலும் காத்து, முன்னெடுத்துச் செல்லவேண்டிய கடப்பாடு தற்போதைய இளையோர்க்கு உரித்தானது. இளையோர்கள் எண்ணங்கொண்டால் நிறைவேற்ற முடியாதது ஏதுமில்லை.

முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் பின்னரான இன்றைய காலத்தில் உளத்திலும் உடலிலும் போரின் வடுக்களைச் சுமந்திருக்கிறது எம்மினம். இந்த மனங்களையும் உடல்களையும் தங்கள் அன்புக்கைகளால் அரவணைத்து, ஆற்றுப்படுத்த இளையோர்கள் இன்னுமின்னும் வேகங்கொள்ள வேண்டும். கல்வி, பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் தனித்துவம் கொண்டு சிறந்திருக்கும் புலம்பெயர்நாடுகளின் இளையோர்களாகிய நாம் தாயகத்தில் நலிவுற்றிருக்கும் இளையோரின் வாழ்வை உயர்த்த திடங்கொள்ள வேண்டும். கடந்த முப்பது ஆண்டுகளாகக் கொடும் போருக்குள் வாழ்ந்தபோதும், இரத்தலை ஒறுத்து, தற்சார்புப் பொருளாதார வலிமையுடன் வாழ்ந்தவர்கள் நாங்கள்.

இன்று எமது வளங்கள் அனைத்தும் ஒடுக்குமுறையாளர்களாலும் வேற்றுநாட்டினராலும் சுரண்டப்பட்டு வருகின்றன. தமது வளங்களைத் தாம் பயன்படுத்திக் கொள்ளமுடியாத நிலையில், இரந்துவாழும் இனமாக எம்மினம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றி, எம்மினத்திற்கு மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கையைப் பெற்றுத்தர புலம்பெயர்நாட்டு இளையோர்களால் முடியும் என்பதே உண்மையாகும்.

தமிழீழ விடுதலை என்பதை வெறும் புலிகளின் கோரிக்கை என்கின்ற அளவில் சுருக்கி நிறுத்த முற்படுகின்ற சிங்களப் பேரினவாத அரசுக்கும், அதற்குத் துணை போகின்றவர்களுக்கும் உறைக்கின்ற வகையில் “தமிழீழ விடுதலை என்பது தமிழர்களின் ஆழ்மன வெளிப்பாடு!! அது எங்கள் உரிமை!” என்பதை உணர்த்தியாக வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.

உலகின் எந்தமூலையில் வாழ்ந்தாலும் எமது நாட்டின் விடுதலைக்கு உறுதியாக குரல் எழுப்பவேண்டும் என புலம்பெயர்நாட்டு இளைய தலைமுறையினரிடம் எம் இனத்தின் பெருந்தலைவன் முன்வைத்த கூற்றை நினைவிற்பதிக்கின்றோம்.

இன்று அந்நியர்களின் ஆக்கிரமிப்பிலிருக்கும் தமிழரின் தாயக பூமியையும் வாழ்வையும் மீட்டெடுத்துப் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் தன்மானத்தோடும் வாழும் நிலையை உருவாக்கிட, இனப்பற்றும், வரலாற்றுத் தெளிவும், அறிவார்ந்த சிந்தனையும், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பெருநம்பிக்கையும் கொண்டிருக்கும் தமிழ் இளையோரால் முடியும் என்பதை நிலைநிறுத்திக்கொள்வோம். இப்பணியில் எம்மில் எத்தனை பேர் இணைந்துள்ளோம் என்பதே எம்முன் எழுகின்ற பெருங்கேள்வி! சிந்திப்போம்! செயற்படுத்துவோம்!

நன்றி,
வணக்கம்.